# 10

## நாமகரணமற்ற கிறிஸ்தவம்:

# விளக்கம் தேவையற்றது

பேதுருவின் உரையில், மீட்பு அல்லது பாவமன்னிப்புப் பெறுவதற்"காக" ஞானஸ்நானம் என்று அறிவிக்கும் வார்த்தையானது (அப். 2:38) "unto" மற்றும் "into" என்ற ஆங்கில வார்த்தைகளைப் போலவே அர்த்தத்தில் திட்டவட்டமாகவும் தெளிவின்மையற்ற தெளிவானதாகவும் உள்ளது. பேதுருவின் உரையைக் கேட்ட திரளான கூட்டத்தில் இருந்த ஒவ்வொருவரும் அவர், மனந்திரும்புதல் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவற்றின் நிபந்தனைகளில் தான் பாவங்களிலிருந்து இரட்சிப்பை அளித்தார் என்பதைப் புரிந்து கொண்டனர். அவர்களில் ஒருவர் கூட அந்த அர்த்தத்தைத் தவறாய்ப் புரிந்து கொள்ளவில்லை. ஏனெனில் பேதுரு, "இதனால்" அல்லது "இதன் அடையாளமாக" என்று அர்த்தப்படும் eis என்ற வார்த்தையை ஒரு புது அர்த்தம் கொடுப்பதற்காக, கிரேக்கர் ஒருவரால் அதற்கு முன்பு ஒருபொழுதும் தரப்பட்டிராத ஒரு அர்த்தத்தைக் கொடுப்பதற்காக ஏற்படுத்தியிருக்க வேண்டும். பேதுருவின் இரு பொருளற்ற உரையை திரளான அக்கூட்டத்திலிருந்த ஒவ்வொரு நபரும் புரிந்து கொண்டது மட்டுமல்ல, ஆனால் எருசலேமின் இந்த நாமகரணமற்ற கூட்டத்தைத் தொடர்ந்து வந்த பல நூற்றுக்கணக்கான ஆண்டுகள் அளவுக்கு, மொழியியல் மாணவர் எவரும், விசாரித்த ஆத்துமாக்களுக்குப் பேதுரு அந்த இரண்டு நிபந்தனைகளின் பேரில் மன்னிப்பு அளிக்கப்படும் என்றுரைத்ததைக் காணத் தவறவில்லையென்றே நான் யூகிக்கின்றேன். இந்த உறுதிப்பாட்டை நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக இவ்வாறே போதித்த மொழி ஆசிரியர் ஒவ்வொருவருக்கும் உரிய துணிகர முயற்சியாகக் கொள்ளலாம்.

பல ஆண்டளவாக ஒரு மொழியில் உள்ள வார்த்தையானது ஒரே அர்த்தத்தைக் கொடுத்துள்ளதென்ற உண்மையானது விளக்கவுரையில் உள்ள சரியான தன்மைக்குப் பலத்த ஆதாரமாக இருக்கின்றது. இதன் மிகச் சரியான தன்மையானது, இந்த விளக்கம் இன்றைய நாளில் மிகச் சிறந்த கல்வியாளர்களால் தரப்படும் விளக்கத்திற்கு இசைவாக உள்ளது என்ற உண்மையினால் விசேஷமாய் ஆதரிக்கப்படுகின்றது ...

ஒருவர் நாமகரணக் கூட்டத்தின் ஒரு உறுப்பினராயிருந்து, வேதாகமத்தின் இந்த உபதேசத்தை விசுவாசியாமல், போதியாமல் இருக்கக் கூடும். இருப்பினும், அவர் ஒரு கிறிஸ்தவராக - நாமகரணமற்ற கிறிஸ்தவராக, பேதுருவைப் போன்ற கிறிஸ்தவராக - மட்டும் இருந்து வேதாகமம் கூறுவதை விசுவாசிக்காமலும் போதிக்காமலும் அவரால் இருக்க முடியுமா?

*நமது கர்த்தர், தம்மைப் பின்பற்றுகின்றவர்கள் ஒரே விதமான சத்தியங்களைப் பேச வேண்டும் என்றும், அவர்கள் ஏக சிந்தனையும் ஏக யோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று விரும்புகின்ற காரணத்தினால், நாம் எருசலேமில் செய்யப்பட்ட இந்த ஊழியத்தில் இதுவரை கருத்தாயிருந்துள்ளோம். எருசலேமில் நிலைத்திருந்த இந்த முக்கியமான விஷயங்கள் குறித்துப் பிரிவினைக்கான நியாயமான காரணம் எதுவும் இருப்பதில்லை. இவைகளின் மீது நாம் குழுக்களாய்ப் பிரிந்தால், அது நமக்குள் எவ்வித சாக்குப் போக்கையும் கொண்டிருப்ப தில்லை என்பதோடு, அது நாம் நமது கர்த்தருக்கு உண்மையற்றவர்களா யிருப்பதையும் காண்பிக்கின்றது. ஆவியானவரால் வழிநடத்தப்பட்டு ஏவுதல் பெற்ற அப்போஸ்தலர்களால் நடத்தப்பட்ட இந்த முதல் கூட்டத்தில், பரலோகத்திலிருந்து புத்தம் புதியதாகப் போதிக்கப்பட்ட படியாக, ஞானஸ்நானத்தின் நோக்கத்தின் மீது நாம் விசேஷமாய் நிலை கொண்டுள்ளோம், ஏனெனில், உண்மையும் நேர்மையும் உள்ள இருதயங்கள் (கூட) இந்த இடத்தில் சாலையில் ஒரு "பிரிவை" உண்டாக்கிப் பிரிந்து போயுள்ளன. இவ்விடத்தில் பிரிவினைக்கு வேதாகம ரீதியான காரணங்கள் எதுவும் இல்லாதிருக்கையில், ஒருவேளை பிரிவினைக்கான சில தெளிவான சாக்குப் போக்கு இருக்கலாம்.*

*பாவிகளுக்கு இயேசுவைப் பற்றிப் போதித்து, அவரே மனிதர்களுக்கு இரட்சகராயிருக்கிறார், அவர்களுக்காக அவர் மரித்து மீண்டும் உயிர்த்தார் மற்றும் அவர் இராஜாதி இராஜாவாக, கர்த்தாதி கர்த்தாவாக முடி சூட்டப்பட்டுள்ளார் என்று காண்பிக்க வேண்டும் என்ற கருத்தை உண்மையுள்ள இருதயங்கள் யாவும் பற்றிக் கொண்டுள்ளன. இந்த உண்மையுள்ள இருதயங்கள், சிலுவையில் அறையுண்டு உயிர்த்த கர்த்தரைப் பற்றிய அறிவானது இரட்சிக்கப்படாதவர்கள் தங்கள் பாவங்கள் குறித்து குத்தப்பட்டு தங்களின் இழந்துபோன நிலையை உணரும்படி அவர்களின் இருதயங்களில் சென்று சேர வேண்டும் என்பதையும் கூட ஒப்புக் கொள்ளுகின்றன. விசுவாசித்து, குற்றம் உணர்த்தப்பட்ட இருதயங்கள் மனந்திரும்பி - அதாவது அவர்கள் தங்கள் முந்திய வாழ்வு முறையைப் புறக்கணித்து, பாவங்களிலிருந்து திரும்பி - இருதயத்தின் முழு நிர்ணயத்துடன் மற்றும் விருப்பத்துடன் இயேசுவைக் கர்த்தரென்று பின்பற்றி தெய்வீகக் கட்டளையாகிய ஞானஸ்நானத்தில் தங்களை அவருக்கென்று ஒப்புக் கொடுக்க வேண்டும் என்பதையும் கூட இந்த நேர்மையான இருதயங்கள் ஒப்புக் கொள்ளுகின்றன. மேலும், இரட்சிக்கப்படாதவர்கள் கொண்டுள்ள இந்த விசுவாசமானது மனந்திரும்பு தலில் வழிநடத்தும் தேவனுக்கேற்ற துக்கத்துடன் இணைந்து, இரட்சிப்புக்கு இயேசுவைச் சார்ந்திருக்கும் நம்பிக்கையையும் தைரியத்தையும் வளர்க்கின்றது என்பதும் கூட ஒப்புக் கொள்ளப் படுகின்றது. இயேசுவே கர்த்தரும்/ஆண்டவரும் கிறிஸ்துவுமாய் இருக்கின்றார் என்று ''உறுதியாக'' அறிவதன் விளைவாகவே மனந் திரும்புதல் ஏற்படுகின்றது என்பது ஒப்புக் கொள்ளப்படுகின்றது. கிறிஸ்துவைப் பற்றிய அறிவினால் தேவனுக்கேற்ற துக்கமும் மனந்*

*திரும்புதலும் உண்டாக்கப்பட்டு அதன் மூலமாக ஆத்துமாவானது நமது பிதாவாகிய தேவன் மேலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேலும் சார்ந்திருக்கும், நம்பிக்கையின் நிலைக்கு வருகின்றது. இப்படிப்பட்ட ஒரு ஆத்துமாவானது "ஒப்புக் கொடுத்த" ஆவியாகி, தர்சுப் பட்டணத்துச் சவுலைப் போல, "ஆண்டவரே நான் என்ன செய்ய வேண்டும்?" (அப். 22:10) என்று கேட்கின்றது. "ஒப்புக் கொடுத்த," நறுங்கிய, நொறுங்கிய இந்த ஆவியானது உண்மையாக மனந்திரும்பிய ஒரு ஆவியாக, கர்த்தர் விரும்புகின்ற எதையும் செய்யத் தயாராக உள்ள ஆத்துமாவாக இருக்கின்றது.*

*இன்னும் நாம் என்ன கூறுவோம்? இதுவரை கூறப்பட்டுள்ளவற்றை ஒப்புக் கொண்ட உண்மையான இருதயங்கள், இயேசுவுக்கு நேர்மையாக உள்ள இருதயங்கள் ஞானஸ்நானம் என்ற கருத்தின் மீது குழுக்களாகப் பிரியுமா? அவர்களிடையே பிரிவினை இருக்கலாகாது என்று இயேசு கெஞ்சிக் கேட்கும் போது, அவர்கள் எவ்விதம் அவ்வாறு பிரிய முடியும்? மேலே விவரித்தபடியாக உள்ள ஆத்துமாக்களுக்குப் பேதுரு, "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்" (அப். 2:38) என்று கூறினார். பவுலின் ஆவி "ஒப்புக் கொடுக்கப்பட்டு" அவர் கர்த்தரிடத்தில் தம்மை முழுமையாய் அர்ப்பணித்த பொழுது, அவரிடத்தில் அனனியா, "நீ எழுந்து, கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு" (அப். 22:16ஆ) என்று கூறினார். "ஒப்புக் கொடுத்த" மற்ற ஆத்துமாக்களுக்கு - விசுவாசம், தேவனுக்கேற்ற துக்கம், மற்றும் மனந்திரும்புதல் ஆகியவற்றினால் தேவன் மீதும் கிறிஸ்துவின் மீதும் சார்ந்துள்ள நிலைக்கு வந்துள்ள ஆத்துமாக்களுக்கு - ஏவுதல் பெற்ற போதகர்கள் அப்படிப்பட்ட ஆத்துமாக்களுக்குக் கூறியவற்றையே அதே விதமாகக் கூறி, அதை அப்படியே விட்டு வைக்க நாம் மனதாயிருக்கின்றோமா?*

*உங்கள் குழுவை நீங்கள் இழந்து போவீர்களோ என்று நீங்கள் பயப்படுகின்றீர்களா? பரிசுத்தவான்களுடனான ஒன்றிப்பை நீங்கள் நேசிப்பதைக் காட்டிலும் உங்கள் குழுவை நீங்கள் மேன்மையாய் நேசிக்கின்றீர்களா? இயேசுவைப் பிரியப்படுத்துவதற்கு மாறாக, உங்கள் குழுவை நீங்கள் உயர்த்திப் பிடிப்பீர்களா? நறுங்கி, நொறுங்கி, ஒப்புக் கொடுத்த ஆவிக்கு ஞானஸ்நானத்திற்கு ஏற்ற வகையிலான அவரது கடமை பற்றிய பரிசுத்த ஆவியானவரின் வார்த்தைகளையே முன் வைக்க நான் மனதாயிருக்கின்றேன். அதை அவர் புரிந்து கொள்வார் என்ற இடர்ப் பாட்டை ஏற்க நான் மனதாயிருக்கின்றேன். நாம் அறிந்துள்ள வரையில் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக ஒரு ஆத்துமா கூட (இதைப் புரிந்து கொள்ளத்) தவறியிருக்கவில்லை.*

*எளிய வார்த்தைகளுக்குச் சிக்கலான விளக்கம் தருவதைச் சார்ந்துள்ள ஒரு கோட்பாட்டை நீங்கள் பற்றிக் கொண்டு இருக்கின்றீர்களா? இவ்விடத்தில் பிரிவினைக்குச் சாக்குப் போக்காய் இருக்கக் கூடியது நாமகரணக் கூட்டத்தின் மீதுள்ள பயபக்தி மட்டுமேயாகும். நாமகரணத்*

துவத்திலும் மற்றும் அதன் மூலமாகவும் கிறிஸ்தவர்கள் ஒருக்காலும் ஒன்றாயிருக்க முடியாது, இயேசுவை ஒருக்காலும் பிரியப்படுத்த முடியாது, மற்றும் அவரது ஜெபமானது ஒருக்காலும் பதில் அளிக்கப்பட முடியாது. இவையிரண்டில் ஒன்றை நாம் தேர்ந்து கொள்ள வேண்டும். "யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்து கொள்ளுங்கள்" (யோசுவா 24:15ஆ). நேர்மையான இருதயங்கள் நாமகரணத்துவத்தை விட்டு விட வேண்டும். கிறிஸ்தவராக - கிறிஸ்தவராக மட்டும், அதைக் காட்டிலும் ஒன்றும் கூடவோ குறையவோ இராது - இருத்தல் என்பது மனித இருதயங்களுக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள மாபெரும் வாய்ப்பாக உள்ளது.